என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

# சிதம்பரத்துத் திருப்பதிகங்கள்

யாழ்ப்பாணம்
கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்

யா. கூ. த. நூ. ப. வி. கழகம் வெளியீடு, 19.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சங்கீதபூஷணம்
[illegible], வி. பரமலிங்கம்

# சிதம்பரத்துத் திருப்பதிகங்கள்

இஃது

மூவர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராந்திரு முறை, திருத்தொண்டர் புராணம், திருப்புகழ், கோபாலகிருஷ்ண பாரதி, முத்துத்தாண்டவர் பாடிய கீர்த்தனங்கள், மாரிமுத்தாபிள்ளை பாடிய கீர்த்தனங்கள் முதலியன கொண்டது.

வெளியீடு:

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1 (693), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு: 1973
விலை ரூபா: 3-00

சர்வதேச புத்தக ஆண்டு

**International Book Year**

*J. C. T. B. P. S. S. Publication No. 19*

# CHITHAMBARAM DEVOTIONAL HYMNS

*Thevaram, Thiruvasakam, Thiruvisaippa, Thiruppallandu, Thirumanthiram, Thiruppugal and the songs of Gopala Krishna Bharathi, Muthuthandavar and Marimuththapillai.*

Published by

THE JAFFNA CO-OPERATIVE TAMIL BOOKS PUBLICATION AND SALES SOCIETY LTD.
(*Regd. No. J*/1538 *of* 10-11-67)

411/1 (693), K. K. S., ROAD, JAFFNA.

# உள்ளடக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்னுரை | | ... | i—iv |
| 1 | திருமுறை | 1 | சற்றுங்கெரி ... | 3 |
| 2 | ,, | 3 | ஆடினாய்நறு ... | 5 |
| 3 | ,, | 4 | செஞ்சடைக் ... | 7 |
| 4 | ,, | 4 | பத்தனாய்ப்பாட ... | 9 |
| 5 | ,, | 4 | பாளையுடைக் ... | 11 |
| 6 | ,, | 4 | கருநட்டகண் ... | 13 |
| 7 | ,, | 5 | அன்னம் ... | 15 |
| 8 | ,, | 5 | பனைக்கைமும் ... | 16 |
| 9 | ,, | 6 | அரியானை அந்தணர் ... | 18 |
| 10 | ,, | 6 | மங்குல் மதி ... | 21 |
| 11 | ,, | 7 | மடித்தாடு ... | 24 |
| 12 | ,, | 8 | சிவபுராணம் ... | 27 |
| 13 | ,, | 8 | கீர்த்தித்திருவகவல் ... | 31 |
| 14 | ,, | 8 | திருவண்டப்பகுதி ... | 36 |
| 15 | ,, | 8 | திருவெம்பாவை ... | 42 |
| 16 | ,, | 8 | திருப்பொற்சுண்ணம் ... | 47 |
| 17 | ,, | 8 | திருப்பள்ளியெழுச்சி ... | 52 |
| 18 | ,, | 9 | திருவிசைப்பா - ஒளிவளர் | 55 |
| 19 | ,, | 9 | திருப்பல்லாண்டு-மன்னுக | 58 |
| 20 | ,, | 10 | திருமந்திரம் ... | 60 |
| 21 | ,, | 11 | கோயில் திருப்பண்ணியர் விருத்தம் ... | 62 |
| 22 | ,, | 12 | திருத்தொண்டர் புராணம் | 63 |
| 23 | | | அருணகிரிநாதர் திருப்புகழ் ... | 65 |
| 24 | | | கோபால கிருஷ்ணபாரதி கீர்த்தனம் | 71 |
| 25 | | | முத்துத்தாண்டவர் கீர்த்தனம் ... | 78 |
| 26 | | | மாரிமுத்தாபிள்ளை கீர்த்தனம் ... | 79 |



நடராசர்

சிவமயம்

## முன்னுரை

*என்னை நன்ருக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே.*

சிவபெருமான், தம்மை மன்னுயிர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுள்ளே மிகவும் சிறந்ததாகக் கருதப்படுவது கோயில் எனப்படும் சிதம்பரமே ஆகும். இங்கே சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தவர்கள் முத்தியையடைவார்கள்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், கல்லாடர், திருமாளிகைத்தேவர், சேந்தனர், கண்டராதித்தர், கருவூர்த்தேவர், நம்பிகாடநம்பி, பட்டினத்தார், அருணகிரிநாதர், சேரமான் பெருமாள் முதலிய நாயன்மார் பலர் சிதம்பரத்தைப் பாடிப்பரவியுள்ளனர். இங்கே மாணிக்கவாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையையும், சேரமான் பெருமாள் நாயனர் பொன் வண்ணத்தந்தாதியையும் பாடினர். அநபாய சோழன் காலத்திற் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடி அரங்கேற்றியருளினர்.

இத்தலத்திலே வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்னியு முனிவர், சிவாலய முனிவர் முதலாய சிவனடியார்களும் இராசராசன் முதலான சோழமன்னர்களும் பிறரும் வழிபட்டுத் திருவடிப்பேறு பெற்றனர்.

மாணிக்கவாசகப் பெருமான், திருநீலகண்ட நாயனர், திருநாளைப்போவார் நாயனர், கூற்றுவ நாயனர், கோச்செங்கட்சோழ நாயனர், கணம்புல்ல நாயனர், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் முதலிய எண்ணிறந்த அருட்சான்ருேர் முத்தி பெற்றதும் இத் தலத்திலேயாம்.

உலகமாகிய விராட்புருடனுக்கு இருதய கமலமாக விளங்குவதும், தரிசித்தால் முத்தி சித்திக்கும் பெருமை

வாய்ந்ததுமாகிய இச் சிதம்பர தலத்துள் நடுநாயகமாக விளங்குவது கூத்தப்பிரானின் கோயிலாகும். இங்கே நடேசப்பிரான் எழுந்தருளிய சிற்றம்பலம் என்னும் சிற்சபையும், திருமஞ்சனங் கொண்டருளும் பொன்னம் பலம் என்னும் கனகசபையும், ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி எழுந்தருளியிருக்கும் நிருத்தசபையும், உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் பேரம்பலம் என்னும் தேவசபையும், ஆனி மார்கழித் திருநாள்களின் முடிவில் எழுந்தருளியிருந்து தரிசனங் கொடுத்தருளும் ஆயிரங் கால் மண்டபமாகிய இராசசபையுமாக ஐந்து திருச்சபை கள் உள்ளன.

சிற்சபையின் கண்ணே கூத்தப் பெருமான் ஆநந் தத் திருக்கூத்தாடுகின்றார். அங்கே படிகலிங்க மூர்த்தி யும் இரத்தினசபாபதியாகிய மரகத நடராச மூர்த்தியும் எழுந்தருளியிருக்கின்றனர். நடராசப் பெருமானின் வலப் பக்கத்திலே ஒரு திரை தொங்குகின்றது. இத் திரைக்குப் பின்புறத்திலே தான் மாசுபடியா ஆகாய மூர்த்தமாகிய சிதம்பர ரகசியம் இருக்கின்றது. இம் மூர்த்தம் நாமரூபவிகற்பம் அடையாதது. இங்கே நட ராசப் பெருமான் சகளத் திருமேனியாகவும், இரகசி யம் நிட்களத் திருமேனியாகவும், படிகலிங்க மூர்த்தி சகளநிட்களத் திருமேனியாகவும் இருக்கின்றதாக நூல் கள் கூறும்.

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் பசுக்கொலைக்குப் பயந்து சிதம்பரம் சென்று வைகியபோது அங்கே ஒரு மடத்தையும் குளத்தையும் உண்டாக்கினர். தெப்போற்சவம் நடைபெறும் மிகப் பெரியகுளமாக விளங்குவது இவர் உண்டாக்கிய ஞானப் பிரகாச குளமேயாகும். இத் தலத்திலேயே முனிவர் திருவடியடைந்தனர்.

ஐந்தாங் குரவராய திருப்பெருந்திரு ஆறுமுக நாவ லர் பெருமான் சிதம்பரத்திற் சைவப் பிரகாச வித்தியா சாலையை நிறுவிச் சைவபரிபாலனஞ் செய்தார். அப் புண்ணிய தலத்திலே, சேக்கிழார் பெருமானுக்குக்

கோயில் ஒன்று கட்டக் கால் கொண்டதோடு பலபிர சங்கங்களுஞ் செய்தார் என்பதை அவர் வரலாறு கூறும்.

சிதம்பரத்தின் எல்லையிலுள்ள திருவேட்களத்திற் சிலகாலம் வதிந்து, அண்ணமலைப் பல்கலைக் கழகத் திலே தமிழ்ப் பேராசிரியராயிருந்து தமிழையும் சைவத் தையும் வளர்த்து, "நடராஜ வடிவம்" "தில்லைத் திரு நடனம்" முதலிய நூல்களை எழுதினர் தவத்திரு விபு லாநந்த அடிகளார்.

* * *

பஞ்சாக்கர வடிவத்தின் இலக்கணத்தையும், பஞ்ச கிருத்திய வடிவத்தின் இலக்கணத்தையும் உண்மை விளக்கம் நூலாசிரியராகிய திருவதிகை மனவாசகங் கடந்தார் என்னும் பெரியார் உரைத்த செய்யுள்களி னுதவியால் உணரலாம்.

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங் - கூடு
மகர முகரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்

[ஐயனே! எல்லா நன்மைகளுக்கும் ஆதாரமாகிய திருச்சிற்றம்பலவன் நடனஞ் செய்யும் முறைமையா கக்கொண்ட திருவுருவத்தின் இயல்பினைச் சொல்லு கிறேன், கேட்பாயாக. நினைத்தற்கரிய திருப்பாதத் திலே ந காரம் பொருந்தும்; திருவயிற்றிலே ம காரம் பொருந்தும்; வளர்ந்து தோன்றும் திருத்தோளிலே சி காரம் பொருந்தும்; சொல்லப்பட்ட திருமுகத்திலே வ காரம் தோன்றும்; திருமுடியிலே ய காரம் பொருந் தும்.]

அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையும்
அஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து -
மஞ்செழுத்தே
ஆநந்தத் தாண்டவமும் யாவைக்கு மப்பாலா
மோனந்த மாமுத்தி யும்

என்பதனல் ஐந்தெழுத்தே ஆநந்த தாண்டவமாமெனை அறிகின்றோம்.

தோற்றம் துடியதனிற் ரேயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் - ஊற்றமா
யூன்று மலரப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

[டமருகமேந்திய திருக்கரத்திலே படைத்தற் றொழிலையும், அமைத்த திருக்கரத்திலே காத்தற் றொழிலையும் அக்கினி யேந்திய திருக்காத்திலே சங்காரத் தொழிலையும், உறுதியாயூன்றிய திருப்பாதத்திலே மறைத்தற் றொழிலையும், தூக்கிய திருப்பாதத்திலே அருளற் றொழிலையும் ஆராய்ந்தறிவாயாக.]

இங்ஙனம், ஐந்தொழில்களும் ஆநந்த நடனத்தினால் நடந்தேறுகின்றன வென உணர்ந்தோம். தில்லை மன்றுள் நடிக்கின்ற திருநடனத்தைக் கண்டு தரிசித்தோர் மேலான உண்மைப் பொருளைக் கண்டு தெளிந்து பிறவிப் பயனைப் பெறுவார்களாதலின் 'தரிசிக்க முத்தி தருஞ் சிவசிதம்பரம்' என ஆன்றோர் கூறினர்.

தில்லைத் திருநடனதைக் கண்டு தரிசித்த கண்ணினாலே பின்னர்க் காண்பதற்குத் தகுந்த பொருள்வேறு இல்லையாதலால், மைதீட்டிய ஒள்ளிய கண்ணினையுடைய உமாதேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப, எம்மிறைவன் கனகசபையின் கண்ணே எந்நாளும் செய்கின்ற ஆநந்த நடனத்தைக் காண்பதே கண்ணினைப் பெற்ற பயனாகும். *(அப்பர் தேவாரம் பக்கம் 11)*

சிவகங்கையில் நீராடல், நடேசப்பிரானைத் தரிசனஞ் செய்தல், சிதம்பரத்தலத்திலே வாசஞ் செய்தல் முதலியவற்றைச் செய்தவர்கள், நடேசப் பெருமானுடைய குஞ்சித பாதத்தையடைந்து பேராநந்தப் பெருவாழ்வெய்துவர். எனவே, இந்நூலில் தரப்படும் சிதம்பரத்துக்குரிய தேவாரமாதியாம் அருட் பாடல்களை நெட்டுருப்பண்ணி பாராயணஞ் செய்து மானசமாக வேனும் சிதம்பர தரிசனங் கண்டு பிறவிப்பயன் பெறுக.

யா. கூ. த. நா. ப. வி. கழகம்.

## திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் அருளியது

திருமுறை 1. பதிகம் : 80

பண் — குறிஞ்சி

**திருச்சிற்றம்பலம்**

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மைய றீர்வாரே. 2

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே. 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி யாகத் தொருபாக
மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்த லிண்ணமே. 8

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. 10

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த மூர்த்திநாயனுர் அருளியது

திருமுறை 3 பதிகம் : 1

பண் — காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆடிஞய்நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடிஞய்இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடிஞய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடிஞயருளாய் சுருங்க எம தொல்வினையே. 1

கொட்டமேகம ழும்குழலாளொடு
கூடிஞயெரு தேறிஞய்நுதற்
பட்டமேபுனைவாய் இசைபாடுவ பாரிடமா
நட்டமேநவில்வாய் மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவாய் இவை மேவிய தென்னைகொலோ.

நீலத்தார்கரிய மிடற்ருர்நல்ல
நெற்றிமேல்உற்ற கண்ணிஞர்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலம்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. 3

கொம்பலைத்தழ கெய்தியநுண்ணணிடைக்
கோலவாண்மதி போலமுகத்திரண்
டம்பலைத்தகண்ணுள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்தெழு காமுறுகாளையர்
காதலாற்கழற் சேவடிகைதொழ
அம்பலத்துறை வான்அடியார்க் கடையாவினையே. 4

தொல்லைஆர்அமு துண்ணநஞ்சுண்டதோர்
தூமணிமிட றாபகுவாயதோர்
பல்லையார்தலை யிற்பலிஏற்றுழல் பண்டரங்கா
தில்லையார்தொழு தேத்துசிற்றம்பலம்
சேர்தலால்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தான்எரியம்மதில் எய்தவனே. 5

ஆகந்தோய்அணி கொன்றையாய்அனல்
அங்கையாய்அம ரர்க்கமராவுமை
பாகந்தோய்பகவா பலியேற்றுழல் பண்டரங்கா
மாகந்தோய்பொழில் மல்குசிற்றம்பலம்
மன்னினாய்மழு வாளினாய்அழல்
நாகந்தோய்அரையாய் அடியாரை நண்ணாவினையே.

சாதியார்பளிங் கின்னொடுவெள்ளிய
சங்கவார்குழை யாய்திகழப்படும்
வேதியாவிகிர்தா விழவாரணி தில்லைதன்னுள்
ஆதியாய்க்கிடம் ஆயசிற்றம்பலம்
அங்கையால்தொழ வல்லடியார்களை
வாதியாதகலும் நலியாமலி தீவினையே. 7

வேயினார்பணைத் தோளியொடாடலை
வேண்டினாய்விகிர் தாஉயிர்கட்கமு
தாயினாய்இடு காட்டெரி யாடல்அமர்ந்தவனே
தீயினார்கணையால் புரம்மூன்றெய்த
செம்மையாய்திகழ் கின்றசிற்றம்பலம்
மேயினாய்கழ லேதொழு தெய்தும் மேலுலகே. 8

தாரினார்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவாநல்ல
தேரினார்மறுகின் திருவாரணி தில்லைதன்னுள்
சீரினால்வழிபா டொழியாததோர்
செம்மையால்அழ காயசிற்றம்பலம்
ஏரினால்அமர்ந்தாய் உன் சீரடி யேத்துதுமே. 9

வெற்றரையுழல்வார் துவர்ஆடைய
　　வேடத்தாரவர்கள் உரைகொள்ளன்மின்
மற்றவருலகின் னவலம்மவை மாற்றகில்லார்
கற்றவர்தொழு தேத்துசிற்றம்பலம்
　　காதலாற்கழற் சேவடிகைதொழ
உற்றவர்உலகின் உறுதிகொள வல்லவரே, 10

நாறுபூம்பொழி னண்ணியகாழியுள்
　　நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும்இன்தமிழால் உயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புகழ் ஏந்துசிற்றம்பலத்
　　தீசனைஇசையாற் சொன்ன பத்திவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தாரொடும் கூடுவரே. 11

**திருச்சிற்றம்பலம்.**

## திருநாவுக்கரசுநாயனார் அருளியது

திருமுறை 4　　　　　　　　　　　பதிகம் : 22

**திருநேரிசை**

*பண் — கொல்லி*

**திருச்சிற்றம்பலம்**

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடுமாறே. 1

ஏறனா ரேறுதம்பா லிளநிலா வெறிக்குஞ்சென்னி
ஆறனா ராறுசூடி யாயிழை யாளோர்பாக
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே, 2

சடையஞர் சாந்தநீற்றர் தனிநிலா வெறிக்குஞ் சென்னி
யுடையஞ ருடைதலையி லுண்பதும் பிச்சையேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
அடிகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 3

பையர வசைத்தவல்குற் பனிநிலா வெறிக்குஞ்சென்னி
மையரிக் கண்ணியாளு மாலுமோர் பாகமாகிச்
செய்யெரி தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றமபலத்தே
கையெரி வீசிநின்று கனலெரி யாடுமாறே. 4

ஓதிஞர் வேதம்வாயா லொளிநிலா வெறிக்குஞ்சென்னி
பூதஞர் பூதஞ்சூழப் புலியுரி யதளஞர்தா
நாதஞர் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகள் தாழக் கனலெரி யாடுமாறே. 5

ஒருடம் பிருவராகி யொளிநிலா வெறிக்குஞ்சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றவெம் பரமமூர்த்தி
காரிடந் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
பேரிடம் பெருகநின்று பிறங்கெரி யாடுமாறே. 6

முதற்றனிச் சடையைமூழ்க முகிழ்நிலா வெறிக்
குஞ்சென்னி
மதக்களிற் றுரிவைபோர்த்த மைந்தரைக் காணலாகு
மதத்துவண் டறையுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோ ரரவமாடக் கனலெரி யாடுமாறே. 7

மறையஞர் மழுவொன்றேந்தி மணிநிலா வெறிக்குஞ்
சென்னி
இறைவஞ ரெம்பிராஞ ரேத்துவா ரிடர்கடீர்ப்பார்
சிறைகொணீர்த் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
அறைகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 8

விருத்தஞய்ப் பாலஞகி விரிநிலா வெறிக்குஞ்சென்னி
நிருத்தஞர் நிருத்தஞ்செய்ய நீண்டபுன் சடைகடாழக்
கருத்தஞர் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
அருத்தமா மேனிதன்ஞே டனலெரி யாடுமாறே 9

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா வெறிக்குஞ்சென்னிக்
காலனைக் காலாற்காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே. 10

மதியிலா வரக்கனோடி மாமலையெடுக்க நோக்கி
நெதியன்றோ ணெரியவூன்றி நீடிரும் பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய் தில்லைதன்னுண் மல்குசிற் றம்பலத்தே
அதிசயம் போலநின்று வனலெரி யாடுமாறே, 11

திருச்சிற்றம்பலம்

திருமுறை 4 பதிகம் : 23

திருநேரிசை பண் - கொல்லி — கௌவாணம்

திருச்சிறம்பலம்

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கே னென்னைநீ யிகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல்காண்பா னடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
ஒருத்தரா லறியவொண்ணாத் திருவுரு வுடையசோதீ
திருத்தமாந் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்பட வந்தவாறே. 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினே னின்றன்பாத நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளைபாயு மல்குசிற் றம்பலத்தே
கூட்டமாங் குவிமுலையாள் கூடநீ யாடுமாறேன் 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தைநீ யருளிச்செய்யா யாதுநான் செய்வதென்னே
செந்தியார் வேள்வியோவாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அந்தியும் பகலுமாட அடியிணை யலசுங்கொல்லோ. 4

கண்டவா திரிந்துநாளுங் கருத்தினா னின்றன்பாதங்
கொண்டிருந் தாடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்டிசை யோருமேத்த விறைவநீ யாடுமாறே. 5

பார்த்திருந் தடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே னென்பனுன்னை மூவரின் முதல்வனென்பன்
ஏத்துவா ரிடர்களைப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான் வந்தவாறே. 6

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா வடிமைசெய்ய
ஐயநீ யருளிச்செய்யா யாதியே யாதிமூர்த்தீ
வையகந் தன்னின்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநின் னாடல்காண்பான் பரமநான் வந்தவாறே. 7

மனத்தினார் திகைத்துநாளு மாண்பலா நெறிகண்மேலே
கனைப்பரா லென்செய்கேனோ கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் னிலயங்காண்பா னடியனேன் வந்தவாறே.

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனேநீ
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
அஞ்சொலாள் காணநின்று வழகநீ யாடுமாறே. 9

மண்ணுண்ட மாலவனு மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவேமிக்க தில்லைச்சிற் றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்

திருமுறை 4 பதிகம் : 80

திருவிருத்தம். பண் - கொல்லி

**திருச்சிற்றம்பலம்**

பாளை யுடைக்கமு கோங்கிப்பன் மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னுள்
ஆள வுடைக்கழற் சிற்றம் பலத்தர னாடல்கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்ன 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி
புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
றிருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே. 2

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்
பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்து பொன்னாகிய தில்லைச்சிற்
றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே. 3

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்ப
தென்னே. 4

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து
நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே. 5

ஊனத்தை நீக்கி யுலகறி யவென்னை யாட்கொண்டவன்
றேனைத் தெனக்கினி யான்றில்லைச் சிற்றம் பலவனெங்
கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்ப
தென்னே. 6

தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
எரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே. 7

சுற்று மமரர் சுரபதி நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையு
ணஞ்சையுண்டான்
செற்றங் கநங்களைத் தீவிழித் தான்றில்லை யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்ணெண்காடு மற்றினிக் காண்ப
தென்னே. 8

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்தின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே. 9

தருக்கு மிகுத்துத்தன் றோள்வலி யுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை யம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்ப
தென்னே. 10

திருச்சிற்றம்பலம்.

திருமுறை 4 பதிகம் : 18

திருவிருத்தம் பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று
வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து
நட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன்
றிருக்குறிப்பே. 2

கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வர்நவி றில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது போலப் பொலிந்
திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமு டைய வெடுத்தபொற் பாதமுங் காணப்
பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்றில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங்
கூழைமையே. 5

பூத்தன பொற்சடை பொன்போன் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள ரோவென்றன் கோல்
வளைக்கே. 6

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னேக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண் ணீறுஞ்
சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலுமென் பாவி
நெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன்
குரைகழலே. 7

படைக்கல மாகவுன் னமத் தெழுத்தஞ்செ னுவிற்
கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக்
காட்செய்கின்றேன்
றுடைக்கினும் போகேன் றொழுது வணங்கித்
தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து
புரிசடைகண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்கர்வேடச்
சின்னத்தி னன்மலி தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்னத்த னுடல்கண் டின்புற்ற தாலிவ் விருநிலமே. 9

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னன்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றேநம்மை யாட்கொண்டதே.

திருச்சிற்றம்பலம்.

திருமுறை 5 பதிகம் 1

## திருக்குறுந்தொகை

### திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. 1

அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்பனென் னாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான்நி லாவி ருயிக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

ஒருத்த னார்உல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே. 7

விண்நி றைந்ததொர் வெவ்வழ லின்னுரு
எண்நி றைந்த இருவர்க் கறிவொணக்
கண்நி றைந்த கடிபொழி லம்பலத்
துள்நி றைந்துநின் றுடு மொருவனே. 8

வில்லை வட்டப் படவாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே. 9

நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

திருமுறை 5 பதிகம் 2

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழுத தும்மறந் துய்வனே. 12

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனே. 13

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனே. 14

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவென்
ஆணியைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனே. 15

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனே. 16

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத்
தாதி யையடி யேன்மறந் துய்வனே. 17

மைகொள் கண்டனெண் தோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்ப லத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனே. 18

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனே. 19

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கைம ணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந் துய்வனே. 20

ஓங்கு மால்வரை யேந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனே, 21

திருச்சிற்றம்பலம்

திருமுறை 6 பதிகம் 1

## பெரிய திருத்தாண்டகம்

**திருச்சிற்றம்பலம்**

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 1

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றொருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2

கருமானின் உரியதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைக ளெட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 5

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ டாறங்க மாயி னானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் னாரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கை மிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 6

வரும்பயனை எழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னைச்
சுரும்பமருங் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 7

காரானை யீருரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சியே கம்பன் தன்னை
ஆரேனும் அடியவர்கட் கணியான் தன்னை
அமரர்களுக் கறிவரிய அளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பால்மதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

திருச்சிற்றம்பலம்

திருமுறை 6 பதிகம் 2

## புக்க திருத்தாண்டகம்

### திருச்சிற்றம்பலம்

மங்குல் மதிதவழும் மாட வீதி
 மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்று லத்தார்
 குடமூக்கி லுள்ளார் போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்குமிட மறியார் சால நாளார்
 தருமபுரத் துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
 புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 1

நாக மரைக்கசைத்த நம்ப ரிந்நாள்
 நனிபள்ளி யுள்ளார்போய் நல்லூர்த் தங்கிப்
பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப்
 பரிதி நியமத்தார் பன்னி ருநாள்
வேதமும் வேள்விப் புகையும் ஓவா
 விரிநீர் மிழலை எழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு மானார்
 புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 2

துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலும்
 தூமதியும் பாம்பு முடையார் போலும்
மறங்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
 மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க்கன் றால நீழல்
 அறமருளிச் செய்த அரனா ரிந்நாள்
புறங்காட் டெரியாடிப் பூதஞ் சூழப்
 புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 3

வாரேறு வனமுலையாள் பாக மாக
மழுவாள்கை யேந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல்சூழ் ஓத வேலித்
திருவாஞ்சி யத்தார் திருநள் ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடல்நஞ் சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 4

காரார் கமழ்கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலங்கை யேந்திக் கணங்கள் பாட
ஊரா ரிடுபிச்சை கொண்டு ழல்லும்
உத்தமராய் நின்ற ஒருவ ளுர்தாம்
சீரார் கழல்வணங்குந் தேவ தேவர்
திருவாரூர்த் திருமூலட் டான மேயார்
போரார் விடையேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 5

காதார் குழையினர் கட்டங் கத்தர்
கயிலாய மாமலையார் காரோ ணத்தார்
மூதாயர் மூதாதை யில்லார் போலும்
முதலும் இறுதியுந் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ அன்று
வன்மதவேள் தன்னுடலங் காய்ந்தா ரிந்நாள்
போதார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 9

இறந்தார்க்கும் என்றும் இறவா தார்க்கும்
இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவா தார்க்கும்
பெரியார்தம் பெருமையே பேச நின்று
மறந்தார்மனத் தென்றும் மருவார் போலும்
மறைக்காட் டுறையும் மழுவாட் செல்வர்
புறந்தாழ் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 7

குலாவெண் தலைமாலை யென்பு பூண்டு
    குளிர்கொன்றைத் தாரணிந்து கொல்லே றேறிக்
கலாவெங் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
    கையோ டனலேந்திக் காடு றைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்ட மாடம்
    நிறைவயல்சூழ் நெய்த்தானம் மேய செல்வர்
புலால்வெண் தலையேந்திப் பூதஞ் சூழப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 8

சந்தித்த கோவணத்தார் வெண்ணூல் மார்பர்
    சங்கரரைக் கண்டீரோ கண்டோ மிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
    படுதலையி லென்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமு மெல்லா
    மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 9

பாதங்கள் நல்லார் பரவி யேத்தப்
    பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர் தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
    எழுபிறப்பும் ஆளுடைய ஈசனார் தாம்
வேதங்க ளோதிஓர் வீணை யேந்தி
    விடையொன்று தாமேறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 10

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
    பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செய்வார் தம்மைத்
    தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
    ஓதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
    கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்தி நாயனுர் அருளியது

திருமுறை 7 பதிகம் : 15

பண் - குஞ்சி

**திருச்சிற்றம்பலம்**

மடித்தாடு மடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரிஅகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற்றம் பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 1

போராது காமத்திற் சென்ருற்போல்
அன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவினுரை
ஓராது தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளும் உள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமுன்அடி
வீழும் சித்தை யாரைத்
தரியாது தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 3

கருமையார் தருமனூர் தமர்நம்மைக்
கட்டிய கட்டறுப்பிப் பானை
அருமையாந் தன்னுலகந் தருவானை
மண்ணுலகங் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 4

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட
உதைத்துகந் துலவா இன்பம்
தருவானைத் தருமனூர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானூர் புலியூர்ச்சிற் றம்பத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே உள்ளமே
ஒழிகண்டாய் ஊன்கண் ஓட்டம்
எத்தாலுங் குறைவில்லை என்பர்காண்
நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற்றம் பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினை யும்போக
விட்டானை மலைஎடுத்த இராவணனைத்
தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 7

கற்ருனுங் குழையுமா றன்றியே
கருதுமா கருதகிற்ருர்க்
கெற்ருலுங் குறைவில்லை என்பர்காண்
உள்ளமே நம்மை நாளுஞ்
செற்ருட்டித் தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு யன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளும்
தாடுடைய தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 9

பாரூரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்ரு மன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

## திருவாசகச் சிறப்பு

அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் — கருவாம்
பகவதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே — அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம்என்னும் தேன்.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை — ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

திருமுறை 8 பதிகம் : 1

## சிவபுராணம்

### திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன்அடி வாழ்க
4

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன்அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லைஇலாதானே நின்பெருஞ்சீர்.
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்ஆ யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே.
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறத்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றல் கட்டிப்
புறந்தோல்போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயின் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனர் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்பரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுஆகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்
தங்கருத்தின்

நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்புஅரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம்வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றுஎன்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின், பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

## கீர்த்தித் திருவகவல்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோர் உலகும்.

துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியார் உள்ளத்து அன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்

சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்
கல்லா டத்துக் கலந்தினிது அருளி
நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்
பஞ்சப் பள்ளியில் பால்மொழி தன்னொடும்
எஞ்சாது ஈண்டும் இன்னருள் விளைத்தும்

கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நல்தடம் படிந்தும்
கேவேடர் ஆகிக் கெளிறது படுத்தும்
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்துஇருந்து

உற்றஐம் முகங்க ளால்பணித் தருளியும்
நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அத்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி

ஏறுடை ஈசன்இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டேறு அருளிக்

கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்
வில்பொரு வேடற்கு ஈந்த விளைவும்
மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்கு அதாகக் காட்டிய தொன்மையும்

அரியொடு பிரமற்கு அளவுஅறி ஒண்ணான்
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்தனக் குப்பரி மாவிற்று
ஈண்டு கனகம் இசையப் பெறுஅது

ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தணன் ஆகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநல் மாநகர் இருந்து

குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும்
உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்

பூவணம் அதனில் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்துஇனிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்

கருவார் சோதியில் கரந்த கள்ளமும்
பூவலம் அதனில் பொலிந்துஇனிது அருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்

விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்
குருந்தின் கீழ்அன்று இருந்த கொள்கையும்
பட்ட மங்கையில் பாங்காய் இருந்துஅங்கு
அட்டமா சித்தி யருளிய அதுவும்
வேடுவன் ஆகி வேண்டுஉருக் கொண்டு

காடுஅது தன்னில் கரந்த கள்ளமும்
மெய்க்காட் டிட்டு வேண்டுஉருக் கொண்டு
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்
ஓரிஊரின் உகந்து இனிது அருளிப்
பார்இரும் பாலகன் ஆகிய பரிசும்

பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்
தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோஆர் கோலம் கொண்ட கொள்கையும்
தேன்அமர் சோலைத் திருவா ரூரில்
ஞானம் தன்னை நல்கிய நன்மையும்

இடைமருது அதனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்
ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்
திருவாஞ் சியத்தில் சீர்பெற இருந்து

மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவகன் ஆகித் திண்சிலை ஏந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்

ஐயாறு அதனில் சைவன் ஆகியும்
துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்
திருப்பனை யூரில் விருப்பன் ஆகியும்
கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்
கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்

புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்
குற்ரு லத்துக் குறியாய் இருந்தும்
அந்தமில் பெருமை அழல்உருக் கரந்து
சுந்தர வேடத்து ஒருமுதல் உருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந் தருளி

எவ்எவர் தன்மையும் தன்வயின் படுத்துத்
தானே ஆகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திரன் ஆகி
அந்தரத்து இழிந்துவந்து அழகுஅமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந்து அருளியும்

மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்

ஊனம் தன்னை ஒருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறும் அருளியு
மாதின் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண்டு அருள்பவன்

கழுக்கடை தன்னைக் கைக்கொண்டு அருளியும்
மூல மாகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதலன் ஆகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்

அரியொடு பிரமற்கு அளவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழிஅருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி ஆகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்

உத்தர கோச மங்கைஊர் ஆகவும்
ஆதி மூர்த்திகட்கு அருள்புரிந்து அருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்
இருள்கடிந்து அருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருள்மலை ஆகவும்

எப்பெருந் தண்மையும் எவ்எவர் திறமும்
அப்பரிசு அதனால் ஆண்டுகொண்டு அருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகஎன
ஏல என்னை ஈங்கொழித்து அருளி

அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியில் பாயவும்
மாலது வாகி மயக்கம் எய்தியும்
பூதலம் அதனில் புரண்டுவீழ்ந்து அலறியும்

கால்விசைத்து ஓடிக் கடல்புக மண்டி
நாதநாத என்று அழுது அரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக்கு அருளிய பரமநா டகஎன்று
இதஞ்சலிப்பு எய்தநின்று ஏங்கினர் ஏங்கவும்

எழில்பெறும் இமயத்து இயல்புடை அம்பொன்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகு உறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்

பொலிதரு புலியூர்ப் புக்கினிது அருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

திருமுறை 8 பதிகம் : 3

## திருவண்டப்பகுதி

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன

இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்

சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியின்
கொட்கப் பெயர்க்கும் குழகன் முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை

கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் நாடொறும்

அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியின் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்

நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணின் திண்மை வைத்தோன் என்றுஎன்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன்
முன்னோன் காண்க முழுதோன் காண்க [அஃதான்று

தன்னேர் இல்லோன் தானே காண்க
ஏனத் தொல்லெயிறு அணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றேன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்

இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க

சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க

அணுத்தருந் தன்மை இலையோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவிளப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க

மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றேன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனேன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க

யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க

கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க

அவளும் தானும் உடனே காண்க
பரம ஆனந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்
திருத்தகு மின்ஒளி திசைதிசை விரிய

ஐம்புலப் பந்தனை வாள்அரவு இரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடுஎழில் தோன்றி வாள்ஒளி மிளிர
எந்தம் பிறவியில் கோடம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்

பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா வின்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட
கேதக் குட்டம் கையற ஓங்கி [வரையுறக்
இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை

நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன
ஆயிடை, வானப் பேரியாற்று அகவயின்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்

கழித்துஎம் பந்தமாக் கரைபொருது அலைத்திடித்து
ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்துஎழுந்து
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டுஅவிழ்

வெறிமலர்க் குளவாய் கோலி நிறைஅகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேல்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித்து இட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த

அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க்கு அருளும் ஆதி வாழ்க
அச்சம் தவிர்த்த சேவன் வாழ்க
நிச்சலும் ஈர்த்துஆட் கொள்வோன் வாழ்க

சூழ்இருந் துன்பம் துடைப்போன் வாழ்க
எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன் வாழ்க
கூரிருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேர்அமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க்கு ஏதில்எம் இறைவன் வாழ்க

காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சரவு ஆட்டிய நம்பன் போற்றி
பிச்சுஎமை ஏற்றிய நம்பன் போற்றி
நீற்றெடு தோற்ற வல்லோன் போற்றி நால்திசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்

நிற்பன நிறீஇச்
சொற்பதம் கடந்த தொல்லோன்
உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் பாடஅன்
கண்முதல் புலனல் காட்சியும் இல்லோன்
விண்முதல் பூதம் வெளிப்பட வகுத்தோன்

பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக்கு எளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றுஎனக்கு எளிவந்து இருந்தனன் போற்றி

அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந்து உள்ளம் களிப்போன் போற்றி
ஆற்றாஇன்பம் அலர்ந்து அலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்

மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்
முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும்

மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்தில் காண்டும் என்று இருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து

வாள்நுதல் பெண்ணென ஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுஉண்டு இல்லை என்றஅறிவு ஒளித்தும்

பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாள்மலர்ப் பிணையலில்
தாள்தளை இடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்

பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்நேர் இல்லோன் தானேஆன தன்மை
என்னேர் அனையோர் கேட்கவந்து இயம்பி
அறைகூவி யாட்கொண்டு அருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்

உளையா அன்புஎன்பு உருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்துஆர்த்து ஓங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண்டு அலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களிறு ஏற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவம் சுவைதரு
கோல்தேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கு அன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்
தடக்கையில் நெல்லிக் கனியெனக்கு ஆயினன்
சொல்லுவது அறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளம் கொண்டுஓர் உருச்செய்து ஆங்குஎனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறுஎனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னில்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமுது ஆக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

திருமுறை 8 பதிகம் 7

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதி ரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து [வோம்
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளள்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணி
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும் [யாள்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி [தாள்
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடை
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற் [யின்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர்
[எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்.

திருமுறை 8. பதிகம் : 9

## திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணிமின்கள் உலக்கையெல்லாம்
காம்பணிமின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்போற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
    தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
    நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடகமெல்லடி யார்க்குமங்கை
    பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
    வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
    சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
    நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
    மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
    மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
    செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொள்கைகள் ஆடஆட
    மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
    செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
    பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றுடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினுர்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினுர்க்குச்
சோதியு மாய்இரு ளாயினுர்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினுர்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினுர்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினுருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினுருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்.

திருமுறை 8 பதிகம் : 20

## திருப்பள்ளியெழுச்சி

### திருப்பெருந்துறையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆநந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 3

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றுர்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுஎமைப் பணிகொளு மாறுஅது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னுவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 7

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 6

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றேம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 10

திருச்சிற்றம்பலம்

திருமுறை 9 பதிகம் 1

திருமாளிகைத்தேவர் அருளிய திருவிசைப்பா

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத்தாநந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. 1

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னு
ளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்
தூயநற்சோதியுட்சோதீ
அடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா
வயனெடுமாலறியாமை
படரொளிபரப்பிப்பரந்துநின்றுயைத்
தொண்டனேன்பணியுமாபணியே.

தற்பரம்பொருளேசசிகண்டசிகண்டா
சாமகண்டாவண்டவாணு
நற்பெரும்பொருளேயுரைகலந்துன்னை
யென்னுடைநாவினுனவில்வான்
அற்பனென்னுள்ளத்தளவிலாவுன்னைத்
தந்தபொன்னம்பலத்தாட
கற்பமாயுலகாயல்லையானுயைத்
தொண்டனேன்கருதுமாகருதே. 3

பெருமையிற்சிறுமைபெண்ணுடாணுயென்
பிறப்பிறப்பறுத்தபேரொளியே
கருமையில்வெளியேகயற்கணுளிமவான்
மகளுமையவள்களைகண்ணே
அருமையின்மறைநான்கோலமிட்டரற்று
மப்பனேயம்பலத்தமுதே
ஒருமையிற்பலபுக்குருவிநின்ருயைத்
தொண்டனேனுரைக்குமாறுரையே. 4

கோலமேமேலைவானவர்கோவே
குணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைநாயகாவெங்கள்
காலகாலாகாமநாசா
ஆலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்
கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத்
தொண்டனேனணுகுமாநணுகே. 5

நீறணிபவளக்குன்றமேநின்ற
நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமேமேருவில்வீரா
ஆறணிசடையெம்மற்புதக்கூத்தா
வம்பொன்செயம்பலத்தரசே
ஏறணிகொடியெம்மீசனேயுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே. 9

தனதனற்றேழாசங்கராசூல
பாணியேதாணுவேசிவனே
கனகநற்றூணேகற்பகக்கொழுந்தே
கண்கண்மூன்றுடையதோர்கரும்பே
அனகனேகுமரவிநாயகசனக
வம்பலத்தமரர்சேகரனே
நுனகழலிணையென்னெஞ்சினுளினிதாய்த்
தொண்டனேனுகருமாநுகரே. 7

திறம்பியபிறவிச்சிலதெய்வநெறிக்கே
திகைக்கின்றேனெனைத்திகையாமே
நிறம்பொன்னுமின்னுநிறைந்தசேவடிக்கீழ்
நிகழ்வித்தநிகரிலாமணியே
அறம்பலதிறங்கண்டருந்தவர்க்கரசா
யாலின்கீழிருந்தவம்பலவா
புறஞ்சமண்புத்தர்பொய்கள்கண்டாயைத்
தொண்டனேன்புணருமாபுணரே. 8

தக்கனற்றலையுமெச்சவன்றலையுந்
தாமரைநான்முகன்றலையும்
ஒக்கவிண்டுருளவொண்டிருப்புருவ
நெறித்தருளியவுருத்திரனே
அக்கணிபுலித்தோலாடைமேலாடை
யாடப்பொன்னம்பலத்தாடும்
சொக்கனேயெவர்க்குந்தொடர்வரியாயைத்
தொண்டனேன்றொடருமாதொடரே. 9

மடங்கலாய்க்கனகன்மார்புகீண்டானுக்
கருள்புரிவள்ளலருளார்
இடங்கொண்முப்புரம்வெந்தவியவைதிகத்தே
ரேறியவேறுசேவகனே
அடங்கவல்லரக்கனரட்டிருவரைக்கீ
ழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத்
தொண்டனேன்விரும்புமாவிரும்பே. 10

மறைகளுமமரர்கூட்டமுமாட்டா
தயன்றிருமாலொடுமயங்கி
முறைமுறைமுறையிட்டோர்ப்பரியாயை
மூர்க்கனேன்மொழிந்தபுன்மொழிகள்
அறைகழலரன்சீரறிவிலாவெறுமைச்
சிறுமையிற்பொறுக்குமம்பலத்துள்
நிறைதருகருணைநிலயமேயுன்னைத்
தொண்டனேனினையுமாநினையே. 11

திருச்சிற்றம்பலம்.

## சேந்தனாரருளிச் செய்த திருப்பல்லாண்டு

திருமுறை 9 இரண்டாம் பாகம்

பண் — பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகல, பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல் லாம்விளங்க, அன்னநடைமடவாளுமைகோனடியோமுக் கருள்புரிந்து, பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற் குப்பல்லாண்டுகூறுதுமே. 1

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள் விரைந்துவம்மின், கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற் காட்செய்மின் குழாம்புகுந், தண்டங்கடந்தபொருளள வில்லதோராநந்தவெள்ளப்பொருள்,பண்டுமின்றுமென்று முள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே. 2

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டன்நிகரிலாவண் ணங்களும், சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களு ேமசிந்தித், தட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக் காலநிழற், பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப்பொருள்சோதித்ததூய்மனத் தொண்டருள்ளீர், சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறு நெறிசேராமே, வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன் விடைப்பாகன், பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 4

புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட்டின்னம்புகலரி தாய், இரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுகிக் கென்செயவல்லமென்றும், கரந்துங்கரவாதகற்பகனுகிக் கரையில்கருணைக்கடல், பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங் கற்கேபல்லாண்டுகூறுதுமே. 5

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந் திசையன, கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழாமாய் நின்றுகூத்தாடும், ஆவிக்கமுதையென்ஞர்வத்தனத்தினை யப்பனையொப்பமரர், பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக் கேபல்லாண்டுகூறுதுமே. 6

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீழ்
ஆரும்பெருதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகில்
ஊருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. 7

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணுரிளங்கொங்கையிற் செங்குங்குமம், போலும்பொடியணிமார்பிலங்குமென்று புண்ணியர்போற்றிசைப்ப,மாலுமயனுமறியாநெறிதந்து வந்தென்மனத்தகத்தே,பாலுமமுதமுமொத்துநின்ருனுக் கேபல்லாண்டுகூறுதுமே. 8

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்த பிரான், மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னிய தில்லைதன்னுள், ஆலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பல மேயிடமாகப், பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல் லாண்டுகூறுதுமே. 9

தாதையைத்தாளறவீசியசண்டிக்கிவ்வண்டத்தொடு முடனே, பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போ னகமுமருளிச், சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண் டர்க்குநாயகமும், பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 10

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங் குழாம்பெருகி, விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமி குதிருவாரூரில், மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ் செய்குடிப்பிறந்த, பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநாள்
நாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனும்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியும்மாடியும்பல்லாண்டுகூறுதுமே.

எந்தையெந்தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரா னென்றென்றுமே, சிந்தைசெய்யுஞ்சிவன்சீரடியாரடிநா யன்செப்புறை, அந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந் தாண்டுகொண்டாருயிர்மேற், பந்தம்பிரியப்பரிந்தவனே யென்றுபல்லாண்டுகூறுதுமே. 12

திருச்சிற்றம்பலம்

## திருமூலநாயனாரருளிச் செய்த

### திருமந்திரம்

திருமுறை 10 தந்திரம் 9

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. 1

சிற்பரஞ் சோதி சிவாநந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே. 2

ஆநந்தம் ஆடரங் காநந்தம் பாடல்கள்
ஆநந்தம் பல்லியம் ஆநந்த வாச்சியம்
ஆநந்த மாக அகில சராசரம்
ஆநந்தம் ஆநந்தக் கூத்துகந் தானுக்கே. 4

ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமுங் கருதுறை யந்தத்
தெளிவாஞ் சிவாநந்த நட்டத்தின் சித்தியே. 4

வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானந் தக்கூத்தே. 3

பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்ககள் ஐந்தின் மிகுமா கமந்தன்னில்
ஓதுங் கலைகாலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே. 4

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை ஆடவே. 5

திருமுறை 11

## நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த
## கோயில் திருப்பண்ணியார் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நெஞ்சந் திருவடிக் கீழ்வைத்து நீண்மலாக் கண்பனிப்ப
வஞ்சங் கடிந்துன்னை வந்தித்தி லேனன்று வானருய்ய
நஞ்சங் கருந்து பெருந்தகை யேநல்ல தில்லைநின்ற
அஞ்செம் பவணவண் ணஅருட் கியானினி யாரென்பரே.

என்புந் தழுவிய ஊனும் நெகஅக மேஎழுந்த
அன்பின் வழிவந்த ஆரமிர் தேஅடி யேன்உரைத்த
வன்புன் மொழிகள் பொறுத்திகொ லாம்வளர்
தில்லைதன்னுள்
மின்புன் மிளிர்சடை வீசிநின் றுடிய விண்ணவனே. 2

அவநெறிக் கேவிழப் புக்கஇந் நாள்அழுந்
தாமைவாங்கித்
தவநெறிக் கேஇட்ட தந்துவ னேஅத் தவப்பயனும்
சிவநெறிக் கேஎன்னை உய்ப்பவ னேசென
னந்தொறுஞ்செய்
பவமறுத் தாள்வதற் கோதில்லை நட்டம் பயில்கின்றதே. 3

கைச்செல்வம் எய்திட லாமென்று பின்சென்று
கண்குழித்தல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட் கேயென்றும்
பொன்றல்இல்லா
அச்செல்வம் எய்திட வேண்டுதி யேல்தில்லை
அம்பலத்துள்
இச்செல்வம் பாதங் கருதிரந்தேன்உன்னை
என்னெஞ்சமே. 4

திருச்சிற்றம்பலம்

## சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த
## திருத்தொண்டர் புராணம்.

திருமுறை 12

**திருச்சிற்றம்பலம்.**

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மான டஞ்செய் வரதர்பொற் றாள் தொழ. 2

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையானாடும் ஆநந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். 3

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார். 4

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய
பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி
போற்றி. 5

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி
போற்றி 6

என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். 7

திருச்சிற்றம்பலம்

---

ராஜ் அச்சகம் 432, காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம்.

## சிதம்பரத்தில் (புலியூரில்)
## அருணகிரிநாதர் அருளிய
# திருப்புகழ்

1.

*தனனதன தான தனனதன தான*
*தனனதன தானத் தனதானா.*

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுருகேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவினை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுநிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிதுவன மேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியூர் வாழ்பொற் பெருமாளே.

---

2.

*தனதன தனதன தானன தானன*
*தனதன தனதன தானன தானன*
*தனதன தனதன தானன தானன தந்ததான*

அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார ஈனனை
அகதியை மறவனை ஆதாளி வாயனை அஞ்சுபூதம்
அடைசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணாதி வீணனை
அழுகலை யவிசலை ஆறான ஊணனை அன்பிலாத

கவடனே விகடனே நாஞவி காரனே
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனே அலியனே ஆதேச வாழ்வனே வெம்பிவீழும்
களியனே யறிவுரை பேஞத மாநுட
கசனியை யசனியை மாபாத ஞகிய
கதியிலி தனேயடி நாயேனே யாளுவ தெந்தநாளோ?
மவுலியி லழகிய பாதாள லோகனு
மரகத முழுகிய காகோத ராஜனு [சேரும்
மநுநெறி யுடன்வளர் சோஞடர் கோனுட னும்பர்
மகபதி புகழ்புலி யூர்வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வாஞடர் கோவென
மலேமக ளுமைதரு வாழ்வேம ஞேகர மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவாந மோநம
தெரிசன பரகதி யாஞய்ந மோநம [சொல்சேருந்
திசையினு மிசையினும் வாழ்வேந மோநம செஞ்
தினேபுன வனிதைம ஞளாந மோநம
திரிபுர மெரிசெய்த கோவேந மோநம
ஜெயஜெய ஹரஹர தேவாசு ராதிபர் தம்பிரானே.

———

3. *தனதன தனன தனதன தனன*
*தனதன தனன தனதான*

எழுகடல் மணலே அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்;
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது;
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வாஞர்;
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே;
விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே!
விரிதலி மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே!

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே!
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே!

---

4. *தனன தானன தனன தானன*
*தனன தானன தனதான*

இருளு மோர்கதி ரணுகொ ணுதபொ
னிடம தேறியெ னிருநோயும்
எரிய வேமல மொழிய வேசுட
ரிலகு மூலக வொளிமேவி
அருவி பாயஇ னமுத மூறவுன்
அருளெ லாமென தளவாக
அருளி யேசிவ மகிழ வேபெற
அருளி யேயிணை யடிதாராய்!
பரம தேசிகர் குருவி லாதவர்
பரவை வான்மதி தவழ்வேணிப்
பவள மேனியர் எனது தாதையர்
பரம ராசியர் அருள்பாலா!
மருவி நாயெனை யடிமை யாமென
மகிழ்மெய் ஞானமு மருள்வோனே!
மறைகு லாவிய புலியூர் வாழ்குற
மகள்மெ லாசைகொள் பெருமாளே!

---

5. *தானன தத்தந் தானன தத்தந்*
*தானன தத்தந் தனதான*

காவியு டுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்,
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே,
சீவனொ டுக்கம் பூதவொ டுக்கம்
தேறவு திக்கும் பரஞான
தீபவி ளக்கங் காணஎ னக்குன்
சீதள பத்மந் தருவாயே.

பாவநி றத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா!
பாணிகள் கொட்டும் பேய்கள்பி தற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா!
தூவிகள் நிற்குஞ் சாலிவ ளைக்குஞ்
சோலைசி றக்கும் புலியூரா!
சூரர்மி கக்கொண் டாடந டிக்குந்
தோகைந டத்தும் பெருமாளே!

---

6. *தனத்தத் தானன தானன தானன*
*தனத்தத் தானன தானன தானன*
*தனத்தத் தானன தானன தானன தந்ததான.*

எலுப்புத் தோல்மயிர் நாடிகு ழாமிடை
இறுக்குச் சீபுழு வோடடை மூளைகள்
இரத்தச் சாகர நீர்மல மேவிய கும்பியோடை;
இளைப்புச் சோகைகள் வாதம்வி லாவலி
உளைப்புச் சூலையொ டேவலு வாகிய
இரைப்புக் கேவல மூலவி யாதியொ டண்டவாதம்
குலைப்புக் காய்கனல் நீரிழி வீளையொ
டளைப்புக் காதடை கூனல்வி சூசிகை
குருட்டுக் கால்முட மூமையு ளூடறு கண்டமாலை;
குடிப்புக் கூனமி தேசத மாமென
எடுத்துப் பாழ்வினை யாலுழல் நாயெனு
னிடத்துத் தாள்பெற ஞானச தாசிவ அன்புதாராய்;
கெலிக்கப் போர்பொரு சூரர்கு ழாமுமி
ழிரத்தச் சேறெழ தேர்பரி யாளிகள்
கெடுத்திட் டேகடல் சூர்கிரி தூள்பட கண்டவேலா!
கிளர்பொற் றேளிச ராசர மேவியெ
யசைத்துப் பூசைகொள் ஆயிப ராபரி [மேவும்
கிழப்பொற் காளைமெ லேறுமெ நாயகி பங்கின்
வலித்துத் தோள்மலை ராவண னைவன்
எடுத்தப் போதுடல் கீழ்விழ வேசெய்து
மகிழ்ப்பொற் பாதசி வாயந மோஅர சம்புபாலா!
மலைக்கொப் பாமுலை யாள்குற மாதினை
அணைத்துச் சீர்புலி யூர்பர மாகிய
வடக்குக் கோபுர வாசலில் மேவிய தம்பிரானே!

---

7. *தனதனன தனன தந்தத் தனதானு*
*தனதனன தனன தந்தத் தனதானு.*

இருவிழையின் மதிம யங்கித் திரியாதே,
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே,
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே,
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே.
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே!
சிவனருளு முருக! செம்பொற் கழலோனே!
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே!
கனகசபை மருவு கந்தப் பெருமாளே!

———

8. *தனதன தனன தனதன தனன*
*தனதன தனனத் தனதான*

தறுகணன் மறலி முறுகிய கயிறு
தலைகொடு விசிறீக் கொடுபோகும்
சளமது தவிர அளவிடு சுருதி
தலைகொடு பலசாத் திரமோதி
அறுவகை சமய முறைமுறை சருவி
யலைபடு தலைமூச் சினையாகும்
அருவரு வொழிய வடிவுள பொருளை
அலம்வர அடியேற் கருள்வாயே.
ஈறுமல ரிறைவி யரிதிரு மருக!
நகமுத வியபார்ப் பதிவாழ்வே!
நதிமதி யிதழி பணியணி கடவுள்
நடமிடு **புலியூர்க்** குமரேசா!
கறுவிய நிருதர் எறிதிரை பரவு
கடலிடை பொடியாப் பொருதோனே!
கழலிணை பணியு மவருடன் முனிவு
கனவிலு மறியாப் பெருமாளே!

9 *தானதன தத்த தந்தன தானதன தத்த தந்தன*
*தானதன தத்த தந்தன தந்ததான.*

நாலுசது ரத்த பஞ்சறை மூலகம லத்தி லங்கியை
நாடியின டத்தி மந்திர பந்தியாலே,
நாரணபு ரத்தி லிந்துவி னூடுறஇ ணக்கி நன்சுடர்
நாறிசைந டத்தி மண்டல சந்தியாறில்
கோலமுழு திப்ப கண்டுள நாலிணைம றித்தி தம்பெறு
கோவெனமு ழக்கு சங்கொலி விந்துநாதங்
கூடியமு கப்பி லிந்திர வானவமு தத்தை யுண்டொரு
கோடிநட னப்ப தஞ்சபை யென்றுசேர்வேன்?
ஆலமல ருற்ற சம்பவி வேரிலிகு லக்கொ ழுந்திலி
ஆரணர்த லைக்க லங்கொளி செம்பொன்வாசி
ஆணவம யக்க முங்கலி காமியம கற்றி யென்றனை
ஆளுமைப ரத்தி சுந்தரி தந்தசேயே!
வேலதையெ டுத்து மிந்திரர் மால்விதிபி ழைக்க வஞ்சகர்
வீடெரிகொ ளுத்தி யெண்கட லுண்டவேலா!
வேதசது ரத்தர் தென்புலி யூருறையொ ருத்தி பங்கினர்
வீறுநட னர்க்கி சைத்தருள் தம்பிரானே!

## கோபாலகிருஷ்ன பாரதியார் இயற்றிய

# நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகள்

இராகம் — ஹரிகாம்போதி தாளம் — திசாம்பு

பல்லவி

பார்க்கப் பார்க்கத் திகட்டுமோ — உன்பாததரிசனம்
பார்க்கப் பார்க்கத் திகட்டுமோ

அநுபல்லவி

ஆர்க்குமா னந்தம் பொழியுந் தில்லைத் தாண்டவராயா
— பார்

சரணங்கள்

தில்லைமூவாயிர முனிவர்கள் தினமும் பூசித்திடும் பாதம்
சிற்சபையில் திந்திமி திமிதோ மென்றாடிய பாதம்
எல்லையில்லாதவின்பம் எந்தனுக்கருள் செய்திடும் பாதம்
இரவும்பகலுமாயன கோபாலகிருஷ்ணனேத்தும் பாதம்
— பார்

---

2

இராகம் — தேவகாந்தாரி தாளம் — ஆதி

பல்லவி

எந்நேரமுமுந்தன் சந்நிதியிலே நான்
இருக்கவேணுமையா — எந்நே

அநுபல்லவி

தென்னஞ் சோலை தழைக்கும் தென்புலியூர்
பொன்னம்பலத்தரசே யென்னரசே — எந்நே

சரணங்கள்

திசையெங்கினும்புக ழுஞ்சிவகங்கையும்
தேவசபையும் சிவகாமி தரிசனமும்
பசியெடாது பார்த்த பேர்க்குக் கலங்கள்
பறந்திட மகிழ்துன்னைப் பாடிக் கொண்டு — எந்நே

பஞ்சாக்ஷரப்படி யுங்கொடிக்கம்பமும்
கோவிலழகும் அரி தானரகசியமும்
அஞ்சல் கூறும்வீர மணிகளோசையும்
அந்தக்கரண மயக்கந் தீர்ந்து பாடிக்கொண்டு — எந்நே

சீலமருவும்தெரு வுந்திருக்கூட்டமும்
தேவருலகில் கிடை யாதவதிசயமும்
பாலகிருஷ்ணன் பணியும் பாதம் பவமெனும்
பயங்கள் தீர்ந்து மலர்கள் தூவித்தொழுது கொண்டு
— எந்நே

---

3.

இராகம் — உசோணி தாளம்— ரூபகம்

தில்லையம்பலத் தலமொன் றிருக்குதாம் — அதைக்கண்
ஜனன மரணப் பிணியைக் கருக்குதாம் [டபேர்க்கு
உயர்ந்தசிகரக்கும்பந் தெரியுதாம் — அதைப்பார்த்த
உள்ளங்குளிரக் கருணை புரியுதாம் [வர்க்கு
பண்ணவர் அயன்மாலுந் தேடுமாம் — அந்தத்தில்லைக்
பாம்புபுலிக்கு நிர்த்த மாடுமாம் [காட்டில்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம் — தனைஅடைந்த
ஆனந்தமுழுக்காட்டிக் கொள்ளுமாம் [வர்களை
போய்தரிசித்தோர் புண்ணியசாலியாம் — அது தருமரா
புறம்புகாமல் தடுத்த வேலியாம் [ஜன்
உருவில்லாத குருவொன் றிருக்குதாம் — அது மூலக்
ஊதியெழுப்பிக்காண உருக்குதாம் [கனலை
உருவமாகிவெளியே வருகுதாம் — அதுநான்மறைக்கட்
உணர்வில்லாதகாட்சி தருகுதாம் [கும்
போய்வருக (வென்று) உத்தரந் தாருமே — தங்கள் பொன்
போற்றுவேன் திருக்கண்ணால் பாருமே. [னடித்தில்லை

---

4.

இராகம் — செஞ்சுருட்டி தாளம் — ஆதி

பல்லவி

சிதம்பரம் போகாம லிருப்பேனோ நான்
சென்மத்தைவீணாக்கிக் கெடுப்பேனோ — சிதம்பரம்

சரணங்கள்

பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ் சொன்னேன் சடலமுமிங்கே — சிதம்பரம்

ஆசையுநேசமு மாநந்தமங்கே
பேசலும் பாசமும் பிதற்றலுமிங்கே — சிதம்பரம்

---

5.

இராகம் — எதுகுலகாம்போதி தாளம் — மிஸ்ரஏகம்

பல்லவி

பித்தந்தெளிய மருந்தொன் றிருக்குது — பேரின்பமன்
[றுள்ளே

அநுபல்லவி

மற்றமருந்துகள் தின்றுலுமுள்ளுக்கு வல்லேல வல்லேல
— ஐயே அடிமை — பித்தந்தெளிய

சரணங்கள்

பாம்பும் புலியுமெய்ப்பாடுபட்டுத்தேடி பார்த்துப்பயிரிட்
[டது
பாரளந்த திருமாயனும் வேதனும் பார்த்துக்களித்த
[துண்டு
பார்வதியென்றெரு சீமாட்டியதில் பாதியைத் தின்ற
[துண்டு — இன்னம்
பாதியிருக்குப் பறையா நீயும்போய்ப் பாரென்றுத் தாருந்
[தாரும் தீரும் — பித்தந்தெளிய

பத்துத்திசையும் பரவிப்படர்ந்தாலும் பார்த்துப் பிடி
[யாரே
தத்திக்குதிக்குந் தாளங்கள்போடுந் தண்டைச் சிலம்பு
[கொஞ்சுந்
தித்திக்குந்தேனே செங்கரும்போ நல்ல சித்தமுடை
[யார்க்கே — என்
சித்தத்தைக் கட்டியிருக்குது அங்கே சென்றுல் போதுங்
[கண்டால் தீரும் — பித்தந்தெளிய

ஊரைச்சொன்னாலு மிப்பாவந்தொலையு மூழ்வினையூட
[றுக்கும்
பேரைக் கொண்டாடிப் புலம்புகிறூர்வெகு பேர்களுக்குப்
[பிழைப்பு
சாருநரைதிரை தீருமருந்து சாதியைப்பாராது — இன்
[னுந்
தீராதநோய்கள் படைத்தவெனக்குத் தீருந்தீருமையே
அடிமை — பித்தந்தெளிய

---

6.

இராகம் — **பேஹாக்** தாளம் — ஆதி

*கண்ணி*

மார்கழிமாதம் திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனதைப்புண்ணுகப் பண்ணுமலொருதரம் போய்வா
[வென்று சொல்லையே

கட்டையிருக்கையில் சிதம்பரம்போய்நான் காணவேணு
[மையே
கசடனுகிலு மாசைவிளையுதுன் காலுக்குக் கும்பிடையே

காலில்நகமுளைத்த நாள்முதலாயுமக் கடிமைக்காரனையே
காலபாசத்தில் காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே

உள்ளங்காலில் வெள்ளெலும்பாட வோடியுழைத்தே
[னையே
உண்டதுமுறங்கின தன்றியிவ்வேறே யொன்றுங்
[காணலை ஐயே

எட்டுமிரண்டுமறியாத பேதைநா னெளியேனுனையே
இன்னந்தாய்வயிற்றி னுள்ளணுகாம லிடங்காட்டிடு
[மையே

வெள்ளைவெளுத்திடுந் தண்ணீர்குடித்திடும் வெறியேனு
[னையே
மேதியினில்நான் நாயினுங் கடையேன்வழிவிட வேணு
[மையே

தானந்தவங்க ளொன்றுங்காணு தடியேனுனையே
தளரவிடவும் வேண்டாமொருகோடி தருமமுண்டுஐயே
அல்லும்பகலுங்க ளாதரவாலே ஆளாகினேனையே
அன்புடனே நல்ல கதிபெறுவாயென் றனுபபவேணுமை
[யே

---

7.

இராகம் — கீரவாணி தாளம் — மிஸ்ரசாபகம்

பல்லவி

இன்னமும் சந்தேகப்படலாமோ

அநுபல்லவி

பொன்னம்பலம் தன்னில் தாண்டவமாடிய
பொற்கழலை நினைவில் வைக்கத்தெரிந்த நீதான்—இன்ன

சரணம்

அன்னமயமெனும் கோசம்தானே — அந்தணர் முதல்
[புலையர் வரைக்கும்
பின்னமறவே தோணுதே — இந்தப் பேதமது காணேன்
தன்னையறிகிற தவமே பெரிதென்று — தரணியில்
கோபால கிருஷணன்
சொன்ன தெல்லாம் மறந்து இந்தமாயச் சுழலிலே
[வீழ்ந்தலைந்தாய் சிவசிவநீ — இன்ன

---

8.

ராகம் — யமுனாகல்யாணி தாளம் — ஆதி

தண்டகம்

சிதம்பரதரிசனங் காணுவிடிலிந்தச்சென்மம்சபலமாமோ
செனனமரண சம்சாரம் பெருகவே செய்தவினைகள்
[போமோ
கண்ணுங் கருத்திருக்க சிவனைக் காணுமல் காலங்கழிக்க
[லாமோ

காலபாசநம தருகில்வராமல் கண்டுபயந்துபோமோ
இப்படியேயெப் போதுமிருப்போமென் றெண்ணியிருக்க
[லாமோ
இருதயமறிந்திடச் செய்திடுங் கன்மங்கள் இகழ்ந்து
[பிரிந்து போமோ
பின்னுமுன்னுமறி யாதமூடர்கள் புத்திகேட்க லாமோ
புலையரவரடியி லிருக்கினு மெய்திடும் புண்ணியங்
[கள் போமோ
பரமசிவனைக்கொண் டாடவேணுமென்று பரிந்துபாவி
பார்த்தேன்
பாபஞ்செய்வார்க்குப் படியாது அதில் பாடுபட்டுப்
[பார்த்தேன்

———

9.

இராகம் — யமுனைகல்யாணி தாளம் — ஆதி

தில்லைவெளியிலே கலந்துகொண்டாலவர் திரும்பியும்
வருவாரோ
எல்லைகண்ட பேரினிபிறவாரென் றியம்புவதறியாரோ
பெண்டுபிள்ளைகள் வெறுங்கூட்டம் அதுபேய்ச் சுரக்
[காய்த்தோட்டம்
கண்டுகொள்ளுவார் பெரியோரறிவில் கனகசபையினுட்
[டம்
திருவாதிரையில் தரிசனங்காணத் தேடித்திரியாரோ
அரிதாகிய விந்தமானிடங்கிடைத்தா லாநந்தமடை
[யாரோ
குஞ்சிதபாதத்தைக் கண்டாலொழிய குறையது நீங்காதே
சஞ்சிதவினை யாதிகளுடாடிய சடலமுந்தாங்காதே
சேரியிடையிலே குடியிருந்தாலிந்தச் சென்மமுந்தொலை
[யாதே
சிதம்பரம்போவேன் பதம்பெறுவேன் தடைசெய்வது
[மறியாதே
இரவும்பகலுமொழியாக் கவலையிருப்பது சுகமோடா
இன்பம்பெருகும் பரமாநந்த வெள்ள மமிழ்ந்து
[நீபோடா.

இராகம் — **பியாக்** தாளம் — **மிஸ்ரகம்**

பல்லவி

ஆடுஞ்சிதம்பரமோ — ஐயன்கூத்தாடுஞ் சிதம்பரமோ

சரணங்கள்

ஆடுஞ்சிதம்பர மன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம் நமச்சிவாயப்பொருள் —ஆடுஞ்

ஆருமறியாமல் அம்பலவாணனர்
சீரடியார்பார்க்கச் சேவடி தூக்கியே —ஆடுஞ்

பாலகிருஷ்ணன் போற்றும் பனிமதிச்சடையினர்
தாளமத்தளம்போட தத்தித் தத்தெய் யென்று—ஆடுஞ்

---

10.

இராகம் — **வசந்த** தாளம் — அட

பல்லவி

நடனமாடினர் — வெகுநாகரீகமாகவே
கனகசபையில் ஆநந்த —நடன

அநுபல்லவி

வடகைலையில் முன்னாள் மாமுனிக்கருள் செய்தபடி
தவருமல் தில்லைப்பதியில் வந்து
தைமாசத்தில் குருபூசத்தில் பகல்நேரத்தில் —நடன

சரணம்

அண்டதிசையும் கிடுகிடென்று — சேயன் தலைநடுங்க
அண்டமதிரக் கங்கைதுளிசிதற பொன்னடைவர்
கொண்டாட

இஷ்டமுடனே கோபாலகிருஷ்ணன் பாடசடையாட
அரவபடமாட — அதிலே நடமாட — தொந்தோமென்று
பதவிகள் — தந்தோமென்று —நடன

தோம் — தகிட தகஜெம் — தகணம் — தரிகும் — தரிதீம்
[— திமிதகஜம்
தகிணம்— தரிணம்தக— தஜ்ஜணுஜ்ஜணு— தித்தாம்—தித்
தாம்
தித்தாஹத தஜ்ஜணு தணந்த டீங்குடீங்கு தையதைய
[தக
ததிமிகிடதக — தகதிமிதகஜணு — தாகிடதகதாம்
தக்கிட — தகதையென — நடன

---

உ

## முத்துத்தாண்டவர் கீர்த்தனம்

இராகம் — மோகனம் தாளம் - ஏகதாளம்

பல்லவி

ஆடிக்கொண்டாரந்த வேடிக்கைக் காணக் கண்
ணுயிரம் வேண்டாமோ — ஆடிக்

அநுபல்லவி

நாடித்துதிப்பவர் பங்கிலுறைபவர் நம்பர்திருச்செம்
பொன்னம்பலவாணர் — ஆடிக்

சரணங்கள்

1. பங்கயச் சிலம்பைந்தாடப் பாதச்சதங்கைகள் கிண்
கிணென்ருடப் பொங்கமுடனே யுரித்துத் தரித்த புலித்
தோலசைந்தாடச் செங்கையிலேந்தியமான்மழுவாடச்
செம்பொற் குழைகண் முயலகனுடக் கங்கையிளம்
பிறைச் செஞ்சடையாடக் கனகசபைதனிலே — ஆடிக்

2. ஆசைநவமணி மாலைகளாட ஆடுமரவம் படம்
விரித்தாடச் சீரணிகொன்றை மலர்த் தொடையாடச்
சிதம்பரத்தோராட பேரணிவேதியர் தில்லைமூவாயிரம்
பேர்களும் பூசித்துக்கொண்டு நின்ருடக் காரணிகாளி
யெதிர்த்து நின்ருடக் கனகசபைதனிலே — ஆடிக்

3. நிர்த்தக்கணபதி வேலர்நின்ருட நின்றயன் மாலுட
னிந்திரனுட முப்பத்து முக்கோடி தேவருடனே
முனிவரும்நின்ருட மெய்ப்பத்திமேவும் பதஞ்சலியாட
வியாக்ரபாதரும் நந்தியுமாட ஒப்புற்றசிவ
காமியம்மையுங் கூடவேநின்ருட — ஆடிக்

———

௳

## மாரிமுத்தாபிள்ளை கீர்த்தனம்

இராகம் — எதுகுலகாம்போதி தாளம் — ஆதி

*பல்லவி*

காலைத்தூக்கி நின்று ஆடும்தெய்வமே யென்னைக்
கைதூக்கியாள் தெய்வமே —காலைத்

*அநுபல்லவி*

வேலைத்தூக்கும் பிள்ளைதனைப் பெற்ற தெய்வமே
மின்னும்புகழ் சேர் தில்லைப் பொன்னம்பலத்திலொரு
— காலை

*சரணங்கள்*

1. செங்கையின் மான்தூக்கிச் சிவந்த மழுவுந்தூக்கி
அங்கத்திலொரு பெண்ணை யனுதினந்தூக்கி,
கங்கையைத் திங்களைக் கதித்த சடையிற் றூக்கி
இங்குமங்குமாய்த் தேடியிருவர் கண்டறியாத — காலை

2. நந்திமத்தளம் தூக்க நாரதர் யாழ் தூக்கத்
தொந்தோ மென்றயன்றாளஞ் சுதியொடுதூக்க
சிந்தைமகிழ்ந்து வானோர் சென்னிமேற் கரந்தூக்க
முந்தும் வலியுடைய முயலகனைத் தூக்கக் — காலை

3. கும்பமண்டத்தைத் தூக்கக் கொடுங்கை
கும்பத்தைத்தூக்கப் பைம்பொற்சுவர் கொங்கை பாதத்
[தைத்தூக்க
எம்பிடாரத்தை விராட்டிதய தாமரை தூக்கச்
செம்பொன்னம் பலத்திலே தெற்குமுக மாயொரு
— காலை

## எமது வெளியீடுகள்

சேக்கிழார் நாயனார் புராணம் : உமாபதிசிவாசாரியர் இயற்றியது ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரையுடன் 2-50

திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள் : திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T.; வித்துவான் ந. சுப்பையபிள்ளை எழுதிய விளக்கவுரைகளுடன். -75

சுவாமி பிள்ளைத்தமிழ் : 2-50

கந்தபுராண நவநீதம் : ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் எழுதியது. 4-00

சிவபுராணம் : வித்துவான் ந. சுப்பையபிள்ளை உரையுடன் கூடியது. -10

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் : ஆறுமுகத் தம்பிரானுரையுடன் 5-00

அபிராமி அந்தாதி : ம. க. வேற்பிள்ளை உரையுடன் 1-50

கந்தரலங்காரம் : மு. திருவிளங்கம் உரையுடன் 2-50

திருவுந்தியார் : சிவப்பிரகாசர் உரையுடன் 1-50

உண்மை விளக்கம் : க. வச்சிரவேலு முதலியார் உரை 1-50

தாமோதரம் : ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை B. A., B. L. அவர்கள் எழுதிய பதிப்புரைகள் 5-00

சிவஞானசித்தியார் (சுபக்கம்) : திரு. மு. திருவிளக்கம் உரையுடன் 15-00

சகலகலாவல்லிமாலை : வித். ந. சுப்பையபிள்ளை உரையுடன் -35

சிவத்தியானமாலை : வித். ந. சுப்பையபிள்ளை உரையுடன் -35

திருமுருகாற்றுப்படை : நாவலர் உரையுடன் 1.50

Words of our Master :
*Teachings of Yogar Swamigal as recorded by four of his disciples* 3-25

சண்முக கவசம் : ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், வித். ந. சுப்பையபிள்ளை உரையுடன் -75

நற்சிந்தனை செய்யுள் உரைத்திரட்டு
சிவயோகசுவாமிகள் அருளிச்செய்தது 1-50

சிதம்பரத்துத் திருப்பதிகங்கள் : 2-00

சங்கீதபூஷணம்
[illegible], வி. பரமலிங்கம்

செட்டியார் அச்சகம்,
432, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்